தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 1.60 பைசா

**தமிழ்நாடு அரசு அரசிதழ்**
**அசாதாரணம்** அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது

எண். 336 சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 18, 2017

ஐப்பசி 1, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி III – பிரிவு 1(அ)

## தலைமைச் செயலகத் துறைகளால் வழங்கப்பட்ட பொது சட்ட விதிமுறைகள், அறிவிப்புகள் ஆணைகள், வழிபடுத்துதல்கள், இன்னபிற

## அரசாங்கத்தின் அறிவிக்கைகள்

### வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை

தமிழ் நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017–ன் திருத்தம்

(அ.ஆ.நி. எண். 141, வணிக வரிகள் மற்றும் பதிவு (ஆ.1), அக்டோபர் 17, 2017, புரட்டாசி 31, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048)

எண்.எஸ்ஆர்ஓஅ–46(உ–1)/2017

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017 (தமிழ் நாடு சட்டம் 2017ன் 19)–இன் பிரிவு 164–ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி தமிழக ஆளுநரால் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017ல் மேலும் திருத்தங்கள் செய்வதற்காக பின்தொடரும் விதிகளை இதன்மூலம் செய்யப்பட்டது, அதாவது

1) இந்த விதிகள் தமிழ் நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஏழாவது திருத்தம்) விதிகள் 2017 என்று அழைக்கலாம்.
2) மற்றபடி இந்த விதிகளில் கொடுக்கப்பட்டுள்ளவாறு, அவை அதிகாரப்பூர்வ அரசிதழில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

2. தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017ன்படி (இனிமேல் இது முதன்மை விதிகள் என்று குறிப்பிடப்படும்).

i) விதி 89, உப விதி (1)ல் மூன்றாவது சட்டவரையறைக்குப் பதிலாக பின்வரும் சட்டவரையறை பதிலிடப்படுகிறது அதாவது

இருப்பினும், மேலும் ஏற்றுமதியாக கருதப்படுபவைக்கு உரிய வழங்கல்கள் தொடர்பாக விண்ணப்பமானது இவர்களால் தாக்கல் செய்யப்படலாம்.

(அ) ஏற்றுமதியாக கருதப்படும் வழங்கல்களைப் பெறுவர், அல்லது

(ஆ) ஏற்றுமதியாக கருதப்படும் வழங்கல்களை வழங்குநர் வழங்கும்போது, பெறுபவர் அந்த சரக்குகளின் மீதான உள்ளீட்டு வரிவரவினை துய்க்காமல், அதன் விளைவிற்கு பொறுப்பேற்கும் கடிதத்தினை அளிப்பதன் விளைவாக வழங்குநர் திருப்புத் தொகையைக் கோரலாம்.

(ii) முதன்மை விதிகளில் விதி 96–க்கு பிறகு கீழ்க்கண்ட விதிகள் சேர்க்கப்பட்டு 2017, ஜூன் 29ஆம் நாள் முதல் இடைச்சேர்க்கப்பட்டது, அதாவது

96அ. பிணைமுறி அல்லது பொறுப்பேற்கும் கடிதத்தின் கீழாக சரக்குகள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியின் மீது செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த வரியினை திருப்பிக் கொடுத்தல்.

1. ஒருங்கிணைந்த வரியினை செலுத்தாமல் சரக்குகள் மற்றும் சேவைகள் ஏற்றுமதிக்கான வழங்கல்களை செய்யும் விருப்பத்தினை துய்க்கும் எந்த பதிவு பெற்ற நபரும், ஏற்றுமதிக்கு முன்பாக பிரிவு 50 உபபிரிவு 1–ல் குறிப்பிடப்பட்டுள்ள வட்டியோடு கூடிய வரியினை அவராகவே செலுத்த கட்டுப்பட்டு ஒரு பிணைமுறி அல்லது பொறுப்பேற்கும் கடிதத்தின்படி கீழ்க்கண்ட காலத்திற்குள் படிவம் ஜிஎஸ்டி ஆர்எப்டி–11ல் செயல் எல்லையின் ஆணையருக்கு அளிக்க வேண்டும்.

(அ) சரக்குகள் இந்தியாவிற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படவில்லை எனில், ஏற்றுமதிக்கான விலைப்பட்டியல் வழங்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்கள் முடிந்த பிறகு 15 நாட்களில் அல்லது

(ஆ) மாற்றத்தக்க அந்நிய செலாவணியில் அந்த சேவைகளுக்கான தொகை ஏற்றுமதியாளரால் பெறப்படாதிருப்பின் ஏற்றுமதிக்கான விலைப்பட்டியல் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டு முடிவுற்ற அல்லது ஆணையரால் அனுமதிக்கப்பட்ட கூடுதல் காலம் முடிவுற்ற நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள்

2. படிவம் ஜிஎஸ்டிஆர்.1ல் உள்ளடக்கிய பொது இணையதளத்திற்கு அளிக்கப்பட்ட ஏற்றுமதி விலைப்பட்டியல்களின் விவரங்கள் சுங்கத் துறையினரால் வடிவமைக்கப்பட்ட முறைக்கு மின்னணு மூலம் மாற்றப்படும். மேலும் அந்த விலைப்பட்டியல்களில் அடங்கியுள்ள சரக்குகள் இந்தியாவிற்கு வெளியே ஏற்றுமதியானது உறுதி செய்யப்பட்டு அந்த முறையிலிருந்து பொது இணையதளத்திற்கு மின்னணு முறையில் மாற்றப்படும்.

3. துணை விதி (1)ல் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குக்குள் சரக்குகள் ஏற்றுமதி செய்யப்படாமல் மற்றும் குறிப்பிட்ட துணை விதியில் கூறப்பட்டுள்ள தொகையினை பதிவு

பெற்றுள்ள நபர் செலுத்தத் தவறினால் பிணைமுறி அல்லது பொறுப்பேற்கும் கடிதத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட ஏற்றுமதி உடனடியாக திரும்ப பெறப்பட்டு அந்த தொகையானது பிரிவு 79 கொடுக்கப்பட்டதற்கு இணங்க அந்த பதிவு பெற்ற நபரிடமிருந்து வசூலிக்கப்படும்.

4. பதிவு பெற்ற நபர் நிலுவைத் தொகையினை செலுத்திய உடனேயே துணை விதி (3)ன்படி திரும்பப் பெறப்பட்ட பிணைமுறி அல்லது பொறுப்பேற்கும் கடிதத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட ஏற்றுமதியானது மீட்டளிக்கப்படும்.

5. ஒரு பிணைமுறி அல்லது பொறுப்பேற்கும் கடிதம் அளிப்பதில் நிபந்தனைகள் மற்றும் பாதுகாப்புகளை, வாரியமானது அறிவிக்கும்.

6. துணை விதி (1)ன் சட்ட வரையறைகளானது சில வேண்டிய மாறுதல்களுடன் ஒருங்கிணைந்த வரி செலுத்தாமலேயே ஒரு சிறப்பு பொருளாதார மண்டல மேம்பாட்டாளர் அல்லது ஒரு சிறப்புப் பொருளாதார மண்டல அலகுக்கு அளிக்கப்பட்ட பூஜ்ய வரி விகித சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டுடிற்குமே பொருந்தும்.

(iii) விதி 96அ, துணை விதி (1), உட்கூறு (அ) வில் “மூன்று மாதங்கள் முடிவுற்ற பின்னர்“என்ற வார்த்தைகளுக்குப் பிறகு “அல்லது ஆணையரால் அனுமதிக்கப்படுகின்ற கூடுதல் காலம்“என்ற வார்த்தைகள் இடை சேர்க்கப்படுகின்றன.

(iv)படிவம் ஜிஎஸ்டி ஆர்எப்டி–01ல்

(அ) “அட்டவணை 2“க்கு, பதிலாக பின்வரும் அட்டவணை மாற்றீடு செய்யப்படுகிறது, அதாவது–

“அட்டவணை–2 (விதி 89(2)(இ)

திருப்புத் தொகை வகை – வரி செலுத்துவதுடன் கூடிய சேவைகளின் ஏற்றுமதிகள்

(தொகை ரூபாயில்)

| வ.எண் | விலைப்பட்டியல் விவரங்கள் | | | ஒருங்கிணைந்த வரி | | மேல் வரி (செஸ்) | பிஆர்சி/ எப்ஐஆர்சி | | ஒருங்கிணைந்த வரி மற்றும் மேல் வரி தொடர்புடைய பற்று குறிப்பு ஏதேனுமிருப்பின் | ஒருங்கிணைந்த வரி மற்றும் மேல் வரி தொடர்புடைய வரவு குறிப்பு ஏதேனும் இருப்பின் | நிகர ஒருங்கிணைந்த வரி மற்றும் மேல் வரி (செஸ்) (6+7+10–11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண் | தேதி | மதிப்பு | வரிவிதிக்கத்தக்க விலைமதிப்பு | தொகை | | எண் | தேதி | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| | | | | | | | | | | | |

(ஆ) “அட்டவணை–4“க்கு, பதிலாக பின்வரும் அட்டவணை மாற்றீடு செய்யப்படுகிறது, அதாவது–

“அட்டவணை–4“ (விதி 89(2)(ஈ) மற்றும் 89(2)(உ)

திருப்புத் தொகை வகை: SEZ அலகு அல்லது SEZ அலகு மேம்பாட்டாளருக்கு செய்த வழங்கல்களின் காரணமாக (வரி செலுத்திய போது)

(தொகை ரூபாயில்)

| பெறுபவரின் சமசேவஅ எண் | விலைப்பட்டியல் விவரங்கள் | | | கப்பல் சரக்குப் பட்டியல்/ஏற்றுமதிக்கான பட்டியல்/சிறப்பு பொருளாதார மண்டலத்தால் மேற்குறியீடு செய்யப்பட்ட பட்டியல் | | ஒருங்கிணைந்த வரி | | மேல் வரி (செஸ்) | ஒருங்கிணைந்த வரி மற்றும் மேல்வரி தொடர்புடைய பற்று குறிப்பு ஏதேனுமிருப்பின் | ஒருங்கிணைந்த வரி மற்றும் மேல்வரி தொடர்புடைய வரவுக் குறிப்பு ஏதேனுமிருப்பினும் | நிகர ஒருங்கிணைந்த வரி மற்றும் மேல் வரி (செஸ்) (6+7+10–11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண் | தேதி | விலை மதிப்பு | எண். | தேதி | வரிவிதிக்கத் தக்க விலை மதிப்பு | தொகை | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

முனைவர் ச. சந்திரமௌலி,
அரசு கூடுதல் தலைமைச் செயலர் (முகூபொ)